DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE/
SUBORDINATE JUDGE, MANAMADURAI

| | |
|---|---|
| Case No. | S.C.No. 60/2021 |
| Police Station | Thiruppuvanam P.S |
| Deposition of Witness for | LW.1 /PW.1 |
| Name | கனகவள்ளி |
| Husband's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

**A2, A3 Present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 24.02.2025 at **12**.00 a.m

**முதல் விசாரணை:**

எனது சொந்த ஊர் சொக்கநாதிருப்பு நான் தற்பொழுது திருப்புவனம் டவுன் நரிக்குடி ரோட்டில் வசித்து வருகிறேன். எதிரி ரிஷிக்குமார் என்பவரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் விக்னேஸ்வரன் மற்றும் பாலையா ஆகியோரை எனக்கு தெரியாது. கடந்த 09.04.2020 அன்று நான் திருப்புவனம் புதூரில் உள்ள எனது தகப்பனார் வீட்டில் இருந்த போது காலை 10 மணிக்கு வீட்டை விட்டு என் தம்பி செந்தில்குமார் வெளியே போனான். பாக்கியராஜ் என்பவர் என்னிடம் வந்து எனது தம்பி செந்தில்குமாரை யாரோ குத்தி விட்டார்கள் அவர் ஆற்றில் கிடப்பதாக கூறினார். நான் பாக்கியராஜூடன் ஆற்றிற்கு சென்று பார்த்த போது எனது தம்பி வயிற்றுபகுதியில் குத்தப்பட்டு குடல் வெளியில் வந்து இரத்த க்காயங்களுடன் கிடந்தான். நான் சென்ற போது எனது தம்பியால் பேசமுடியவில்லை. எனது தம்பி பெரியசாமி மற்றும் பாக்கியராஜ் ஆகியோர் உதவியுடன் எனது தம்பி செந்தில்குமாரை ஆட்டோவில் ஏற்றி திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு

சிகிச்சைச்காக அழைத்து சென்றோம். நான் அங்கிருந்து திருப்புவனம் காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அந்த புகார் மனு அ.சா.ஆ.1. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்குவிசாரணை இல்லை

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

உதவி அமர்வு நீதிபதி

மானாமதுரை